# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

தயாரிப்பு நடவடிக்கைகள் 2018 திசெம்பர் உடன் ஒப்பிடுகையில் சனவரி மாதத்தில் ஒரு உயர்வான வீதத்தில் அதிகரித்தது. இது, தொழில்நிலை மற்றும் உற்பத்தியில் ஏற்பட்ட விரிவாக்கத்தினால் விசேடமாக புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் அத்துடன் சார்ந்த நடவடிக்கைகளினால் பிரதானமாக உந்தப்பட்டது. வெற்றிடங்களை நிரப்புவதற்கு சேர்க்கப்பட்ட புதிய தொழிலாளர்களின் தொழில்நிலையில் ஒரு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் உணரப்பட்டது. அதன்படி, முன்னைய மாதத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கட்டளைகள் மற்றும் அதிகரித்த தொழில்நிலையுடன் உற்பத்தியும் அதிகரித்திருந்தது.

| மாறி | 2018 திசெ. | 2019 சன. | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **53.7** | **54.4** | **+** | **அதிகரிப்பு, உயர்வான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 57.0 | 54.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 51.5 | 55.5 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 46.5 | 52.5 | + | வீழ்ச்சியிலிருந்து உயர்வுக்கு |
| கொள்வனவுகளின் இருப்பு | 60.5 | 55.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | 55.5 | 55.0 | - | நீட்சி, மெதுவான வீதத்தில் |


எவ்வாறாயினும், பண்டிகை பருவகால கேள்விகள் முடிவுடன் புதிய கட்டளைகள் குறைவடைந்தன. முன்னைய மாதத்திலிருந்து கொண்டுவரப்பட்ட உள்ளீட்டுப் பொருட்களின் இருப்புகளின் கிடைப்பனவு மற்றும் குறைந்தளவான புதிய கட்டளைகளின் கேள்வியுடன் கொள்வனவுகளின் இருப்பும் குறைவடைந்திருந்தது. 2019 சனவரியின் இறுதிக் காலப்பகுதியில் உணரப்பட்ட பொருட்கள் வழங்கல் ஏற்பாடுகளின் பிரச்சினைகள் காரணமாக நிரம்மலர் வழங்கல் நேரம் சிறிதளவில் நீட்சியடைந்திருந்தது.

தயாரிப்பு கொ.மு.சுட்டெண்ணின் அனைத்து துணைச் சுட்டெண்களும் நடுநிலையான 50.0இற்கு மேலான பெறுமதியினைக் காண்பித்ததுடன் 2018 திசெம்பர் உடன் ஒப்பிடுகையில் 2019 சனவரியில் ஒரு உயர்வான வீதத்தில் ஒரு ஒட்டுமொத்த விரிவாக்கத்தினைக் காண்பித்தன.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**54.4**

திசெம்பர் 2018 உடன் ஒப்பிடுகையில் 0.7 சுட்டெண் புள்ளிகள் அதிகரிப்பு

### கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பு




### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலக தயாரிப்பு கொ.மு.சு 2019 சனவரியில் 50.7 பெறுமதியினை பதிவு செய்து 2018 திசெம்பரிலிருந்து 0.8 சுட்டெண் புள்ளிகள் குறைவடைந்து காணப்பட்டது.

ஐரோப்பிய வலயம், ஐக்கிய இராச்சியம், சீனா, சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு 2019 சனவரியில் மெதுவடைந்திருந்துடன் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா என்பன அதிகரித்திருந்தது.

*(மூலம்: மார்க்கிட், 2019 பெப்புருவரி 14 இல் உள்ளபடியான)*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குனராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் ஐரோப்பிய வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**தொழில்நிலையில் ஏற்பட்ட உறுதியான மேல்நோக்கிய திருப்பத்தினாலும் புதிய வியாபாரங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கையினாலும் 2019 சனவரியில் பணிகள் துறையில் வளர்ச்சி அதிகரித்திருந்தது.**

2018 திசெம்பர் காலப்பகுதியில் தாமதமாக்கப்பட்ட வெற்றிடமாகியிருந்த பதவிநிலையினை நிரப்புதலுக்கான ஆட்சேர்ப்பினால் 2019 சனவரில் தொழில்நிலை துணைக் சுட்டெண்ணானது ஏழு மாதங்களுக்கான ஒரு உயர்வினை அடைந்தது. புதிய வகுப்புக்களின் உட்சேர்ப்பினாலும் மற்றும் புத்தாண்டிற்கான பரிசுப்பொருட்கள் அனுப்புதலின் அதிகரிப்பினாலும் கல்வி மற்றும் தபால் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் துணைத் துறைகளின் பதிலிறுப்பாளர்கள் 2019 சனவரி காலப்பகுதியில் தங்களுடைய புதிய வியாபாரங்கள் அதிகரித்திருந்ததாக சுட்டிக்காட்டியிருந்தனர். புதிய வரவுசெலவுத்திட்டம் உள்நாட்டு பொருளாதாரத்திற்கு ஒரு உத்வேகத்தினை அளிக்கும் என்பதனை பணிகள் வழங்குநர்கள் எதிர்பார்ப்பதனால் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புகளும் அதிகரித்திருந்தன.

| மாறி | 2018 திசெ. | 2019 சன. | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **54.7** | **55.8** | **+** | **அதிகரிப்பு, உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய வியாபாரங்கள் | 55.4 | 57.7 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 64.5 | 56.7 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 44.1 | 57.4 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 47.2 | 42.9 | - | வீழ்ச்சி, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 62.4 | 64.4 | + | சாதகம், உயர்வான வீதத்தில் |


எவ்வாறாயினும், ஆண்டு தொடக்கத்தில் வியாபார நடவடிக்கைகளில் செயலற்ற விரிவாக்கம் பருவகாலத்தினால் ஏற்பட்டிருக்ககூடும். ஏனெனில், பண்டிகைப் பருவகாலம் மற்றும் சுற்றுலாவிற்கான உயர்ந்த பட்ச பருவகாலம் போன்ற உயர்வான நடவடிக்கைகளையுடைய 2018 திசெம்பர் உடன் 2019 சனவரியின் நடவடிக்கைகள் ஒப்பீடு செய்யப்பட்டமையினாலாகும்.

ஏப்பிறல் மாதத்தில் வரவிருக்கின்ற வருடாந்த அதிகரிப்புக் காரணமாக பணிகள் துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவுகள் ஒரு உயர்வான வீதத்தில் அதிகரித்திருந்த வேளையில், உள்நாட்டு நாணயப் பெறுமதி உறுதியடைந்திருந்தமையின் காரணமாக பணிகள் துறையில் விதிக்கப்பட்ட விலைகள் ஒரு மெதுவான வித்தில் 2019 சனவரியில் அதிகரித்திருந்தது..

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**55.8**

**2018 திசெம்பர் உடன் ஒப்பிடுகையில் 1.1 சுட்டெண் புள்ளிகள் அதிகரிப்பு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் பணிகள்**




***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலக பணிகள் கொ.மு.சு 2018 திசெம்பரின் 53.0இலிருந்து 2019 சனவரியில் 28 மாதங்களுக்குக் குறைவான 52.6 சுட்டெண் பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்து 2019 சனவரியில் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் துறையின் வெளியீட்டின் விரிவாக்கத்தின் வீதமானது மேலும் மெதுவடைந்ததனை குறித்துக்காட்டுகின்றது. ஏவ்வாறாயினும் இது கடந்த 114 மாதங்களுக்குமாக பணிகள் துறையின் வெளியீட்டில் வளர்ச்சியினை இப்பொழுது சமிஞ்சைப்படுத்தியது.

ஜப்பான், சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு 2018 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2019 சனவரியில் அவர்களுடைய பணிகள் துறையானது மேம்பாடு அடைந்தமையினை சுட்டிக்காட்டுன்றன.

*(மூலம்: மார்க்கிட், 2019 பெப்புருவரி 14 இல் உள்ளபடியான)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு = 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு > 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு < 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.